

தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் கழக முதன்மைச் செய லாளரும், நகர்ப்புற நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத் தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தமிழ் நாட்டிற்கான டெல்லி சிறப்பு பிரதி நிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், ச.முரசொலி எம்.பி, எம்.எல்.ஏக்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், மாநகர செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன், உள்ளிட்ட தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செய லாளர்கள், மாவட்ட சார்பு அணி களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





திருப்பத்தூர் மாவட்ட திமுக அவசர செயற்குழுக் கூட்டம் ஏலகிரிமலையில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன் தலைமையில் நடந்தது. மாவட்ட கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொதுப் பணிதுறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறைஅமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, முதல்வர், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், நமது மாவட்டத்திற்கு வருகை குறித்தும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்தும், 2026 சட்டமன்ற பொது தேர்தல் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி பேசினார். இக்கூட்டத்தில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வ நாதன்,மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நார்வே செஸ் - 2025 தொடரில் 3-ஆம் இடம்!

# இந்திய செஸ் எதிர்காலத்தின் அடையாளம் குகேஷ்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, ஜூன் 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

***நார்வே செஸ் 2025 தொடரில் நமது குகேஷ் அவர்கள் 14.5 புள்ளிகளுடன் அபாரமாக விளையாடி மூன்றாம் இடம் பெற்றிருப்பதில் பெருமை கொள்கிறேன்.***

***மிகச் சிறந்த திறமையும் உறுதியும் ஒருங்கே பெற்றுள்ள குகேஷ் அவர்கள் இந்திய செஸ் எதிர்காலத்தின் அடையாளமாகத் தொடர்ந்து மிளிர்கிறார்.***

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### விருதுநகர் - மெட்டுக்குண்டு வெடிபொருள் தொழிற்சாலை

# தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.4 லட்சம் நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 9-

விருதுநகர் மாவட்டம், மெட்டுக்குண்டு கிராமத்தில் இயங்கிவரும் தனியார் வெடிபொருள் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - வழங்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அவரது அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், மெட்டுக்குண்டு கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான வெடிபொருள் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (07.06.2025) பிற்பகல் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் அருப்புக்கோட்டை, குல்லூர் சந்தை, தெற்குத் தெருவைச் சேர்ந்த சங்கிலி (வயது 45) த/பெ.மொக்கைச்சாமி என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.கஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தென்காசி மாவட்டத்தில்

# ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் துவக்க விழா!

## ராணி ஸ்ரீகுமார் எம்.பி. ஈ. ராஜா எம்.எல்.ஏ.- மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

தென்காசி.ஜூன் 9 -

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் ரூபாய் 1.38 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள்,சிவகிரி அரசு மருத்துவமனையில் ரூபாய் 3.50 கோடி மதிப்பில் கூடுதல் கட்டிடம் அடிக்கல் நாட்டும் நிகழ்வு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் (07.06.2025) பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப் பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக் குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் துவக்கி வைத்து சிவகிரி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிவகிரி அரசு மருத்துவமனையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.தரை தளத்தில் மருந்தகம்,மின்சார அறை, பதிவு அறை,வரவேற்பு அறை,கட்டு போடும் அறை,உயிரிழப்பு பாது காப்பு மருத்துவர் அறை,நுண் கதிர் அறை, Triage பிரிவு,ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை வசதிகளுட னும்,முதல் தளத்தில் மருந்தகம், மின்சார அறை,பரிசோதனை அறை, 15 படுக்கைகள் கொண்ட ஆண்கள் பிரிவு,செவிலியர் அறை,ஆண்கள் கழிப்பறை வசதிகளுடனும்,சாய்தள வசதிகளுடனும் அமைக்கப்பட உள்ளது.

மேலும் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் நகராட்சியில்,காந்திநகர் மற்றும் கக்கன்நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் 06 கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்களும், காரிச்சாத்தான் ஊராட்சி, மலையடிப்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையமும், வெள்ளாளங்குளம் ஊராட்சி மற்றும் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.14.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையமும், களப்பாகுளம் ஊராட்சி புளியம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையமும், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடலூர் ஊராட்சி மெயின் ரோடு பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாற்றுத்திற னாளிகள் நலத்துறையின் மூலம் 20 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 22.00 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைகுமார், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் ஆகியோர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) அனிட்டா சாந்தி,உதவி செயற்பொறியாளர் ஜான் ஆசிர்,உதவி பொறியாளர் சுரேந்திரன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பொன்முத்தையா பாண்டியன், சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் உமாமகேஸ்வரி,நகர செயலாளர் மு.பிரகாஷ்,மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம்,மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி அலுவலர் மாரியப்பன் மற்றும் அரசு மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மேற்கு ஒன்றியம் மீனாட்சிபுரம் பேரூர்பகுதியில் பேரூர் செயலாளர் செல்வம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மீனாட்சிபுரம் பேரூராட்சி பகுதியில் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதில் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட - தமிழ்நாடு உள்ளிட்ட

# மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்க சதி!

## ஒன்றிய அரசு மீது தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 9-

மக்கள் தொகையை கட்டுப்படுத்தாத பாஜக ஆளும் மாநிலங்களின் எம்.பிகளின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழ்நாடு உள்ளிட்ட மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க சதி செய்கிறது ஒன்றிய பாஜக அரசுஎன்று



தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் குற்றச்சாட்டி அறிக்கை வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கை வருமாறு: -

ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்களாட்சி என்ற மகத்தான அரணை புல்டோசர்களைக் கொண்டு இடித்து தள்ளி நாசம் செய்யும் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறது. எந்தவித விவாதங்களுமின்றி மக்களைப் பாதிக்கும் சட்டங்களைக் கொண்டு வருவது, சர்வாதிகார போக்கோடு மாநிலங்களை வஞ்சிப்பது தொடர்கதையாகி வருகிறது. அதன் உச்சமாக அவர்கள் நிறைவேற்றத் துடிப்பதுதான் 2027 மக்கள்தொகை அடிப்படையில் மேற்கொள்ள இருக்கும் மக்களவைத் தொகுதி மறுவரையறை.

84ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி 2026க்கு பின் எடுக்கப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள வேண்டும். இதை நிறைவேற்றி மக்கள் தொகையை கட்டுப்படுத்தாத பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் MPகளின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழ்நாடு உள்ளிட்ட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட மாநிலங்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தைக் குறைக்க சதி செய்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இச்சதியை ஆரம்பத்திலேயே அம்பலப்படுத்தி , பாதிக்கப்படப் போகும் மாநிலங்களை ஓரணியில் திரட்டி நியாயமான தொகுதி மறைவரையறை மேற்கொள்ள வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள். அப்போதெல்லாம் அதனை வீண் பயத்தை உண்டாக்குகிறார் என்று மூடி மறைக்க நினைத்தவர்கள் இப்போது 2027இல் மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என அறிவித்தது மூலம் சாயம் வெளுத்து போய் நிற்கிறார்கள்.

கொரோனா காரணமாக 2021இல் எடுக்காமல் விட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பை 2023இல் எடுத்திருக்கலாம், 2024, 2025இல் எடுத்திருக்கலாம். ஆனால் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி 2027இல் எடுப்பதன் நோக்கம் ஒன்றே ஒன்றுதான், அது 2027 மக்கள் தொகை அடிப்படையில் MPகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமே.

இதற்கு என்ன சொல்ல போகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு? மோடியும் அமித்ஷாவும் என்ன சொல்ல போகிறார்கள்? தமிழ்நாட்டின் MPகளின் எண்ணிக்கை குறையாது என்ற பழைய ஏமாற்று பல்லவியைப் பாடப் போகிறீர்களா? இல்லை Pro rata என்று கதையளந்து ஏமாற்றலாம் என எண்ணுகிறீர்களா.?

தமிழ்நாட்டு மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. தமிழ்நாட்டின் குரல் வளையை நசுக்கி அரசியல் உரிமைகளற்ற அடிமைகளாக மாற்றும் ஒன்றிய பாஜக அரசின் சதி திட்டத்தை எல்லாம் அறியாதவர்கள் அல்ல. தமிழ்நாட்டு மக்கள் கேட்பது ஒன்றே ஒன்றுதான், திராணி இருந்தால் நாவில் 1 விழுக்காடேனும் உண்மை இருந்தால் நேர்மையாக பதில் அளியுங்கள்...

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி தொகுதி மறுவரையறை நடைபெற்றால் நாடாளுமன்றத்தில் 7.18% என்ற தமிழ்நாட்டின் அரசியல் பிரதிநிதித்துவம் குறையுமா? குறையாதா?

இல்லை, தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப் போவதில்லை என்றால் 2026இல் காலாவதியாகும் சட்டத்திருத்தத்திற்கு மாற்றாக மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறையைத் தள்ளி வைக்கும் சட்டத்திருத்தம் எப்போது கொண்டுவரப்படும்?

பதில் சொல்லுங்கள் அமித்ஷா.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கொத்த மங்கலம் சாலையில் உள்ள ஈத்காமைதானத்தில் நடந்த பக்ரீத் பண்டிகையின் சிறப்பு தொழுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளல் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டார். உடன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளிட்ட இஸ்லாமிய பெருமக்கள் உள்ளனர்.